2015 செப்டம்பர் 3]

மல்லியகரை ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியைச் சுற்றி 10 ஊராட்சிகள் அமைந்துள்ளன. எனவே, மல்லியகரை ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியை அமைத்துக் கொடுத்தால், அந்த மாணவர்கள் அங்கு தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால், விடுதி அமைத்துக் கொடுக்குமாறு கோரி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில், ஒரு புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க வேண்டுமென்றால், அதைச் சுற்றி 8 கி.மீ. தொலைவிற்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி எதுவும் இருக்கக் கூடாது என்ற நிபந்தனை உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள மல்லியகரை ஊராட்சியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள கீரிப்பட்டியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மல்லியகரை ஊராட்சிப் பகுதியில் புதியதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

ஆரம்ப சுகாதார நிலையம்

***53914—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், ஜவ்வாதுமலை ஒன்றியம், கிளையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய பகுதியில் ஏற்கெனவே மக்கள்தொகைக்கேற்ப அமைந்துள்ள 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக உள்ளன. எனவே, கிளையூர் கிராமத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

முற்பகல் 11-10

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வாழ, தமிழ்நாட்டு மக்கள் வாழ தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னை தெரசாவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றரை கோடி தொண்டர்களின் நிரந்தரத் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் தமிழ்நாட்டில் செய்து கொண்டிருக்கின்ற பணிகள் சிகரத்தையே மிஞ்சுகிறது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா எப்பொழுது வருவார்கள், விதி எண் 110-ன்கீழ் அறிக்கையைப் படிப்பார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கும் நலத் திட்டங்கள் கிடைக்குமா என்று காத்துக் கொண்டிருக்கின்றது அம்மா தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உங்களின் சிந்தனையெல்லாம் மக்களின் நலனுக்காகவே. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்யும் திட்டங்களைப் பின்பற்றவே எல்லா மாநிலங்களும் ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டு செல்கின்றார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அரசை நாடி மக்கள் என்று சொல்லும் நிலையை மாற்றி, இன்று மக்களை நாடி அரசு செல்கின்ற நிலையை வரவைத்த அன்னையே! உங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், ஜவ்வாதுமலை ஒன்றியம், கிளையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். 25,000-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வாழுகின்ற பகுதியாக கிளையூர் கிராமம் இருப்பதால், அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் வரலாற்றுச் சாதனையாக 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை (மேசையைத் தட்டும் ஒலி) 134.5 கோடி ரூபாய் செலவில் தொடங்கி, புதிய கட்டடங்களை வழங்கியிருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிளையூர் கிராமம் மலைப் பகுதி எனக் கூறுவதால், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையிலான திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.